Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 28/2024

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கணேசன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | நாராயணசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | ஆற்காடு | வயது | - | 60 |

17.12.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஆற்காடு கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். எதிரிகளை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு காலை சுமார் 09.30 மணியளவில் அ.சா.1-ற்கும், எதிரிக்கும் சண்டை நடந்தது.

2. அந்த சண்டை சம்மந்தமாக சுமார் 11.00 மணியளவில் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் சண்டை நடந்த இடத்தை பார்த்துவிட்டு காணிக்கல் பிடுங்கியஇடத்தையும் பார்வையிட்டு எழுதிக்கொண்டு சென்றார்கள். **பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 முதல் 3 எனது உறவினர் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. போலீஸ் என்னிடம் கையெழுத்து வாங்கியதாக சொல்கிறேனே அதில் எத்தனையாவது

கையெழுத்து போட்டேன் என்றால் தெரியவில்லை, கூலி வேலை செய்கிறேன். அதில் உள்ள விஷயங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. போலீஸார் அதில் என்ன உள்ளது என்று படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள், ரொம்ப நாள் ஆனதால் மறந்துவிட்டது. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் விசாரணை நடந்த போது நான் வந்தேனா என்றால் வந்தேன். அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள்.

3. காவல் நிலையத்தில் வாங்கியதில் எழுதியிருந்ததா, எழுதாமல் இருந்ததா என்றால் கையெழுத்து போடச்சொன்னார்கள் போட்டேன், எழுதியிருந்ததா என்று நியாபகம் இல்லை. மகசரில் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் போட்டதா என்றால் ஆமாம்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.